பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 09 2024 **SUNDAY** **6.30 PM**

மாநில செய்திகள் -

தலைப்புச் செய்திகள்

1. உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா அடுத்த மூன்றாண்டுகளில் உருவெடுக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுக்கான பாதுகாப்பு அரணாக தமது அரசு திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென சிறப்புக்குழு ஒன்றை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும் என்று அஇஅதிமுக வலியுறுத்தியுள்ளது.

4. அரசு போக்குவரத்துக்கழக பேருந்துகளின் தரத்தை உயர்த்த திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்சர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் பட்டம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<>>>>>>**

விரைவான பொருளாதார வளர்ச்சியை கண்டுவரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, **Ramban** மாவட்டத்தில் பிஜேபி சார்பில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

அடுத்த மூன்றாண்டுகளுக்குள் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் கூறியிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும் திரு ராஜ்நாத் சிங் கூறினார்.

<<<<<>>>>>>

விளையாட்டுத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசு பல மடங்கு அதிகரித்துள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் ஒலிம்பிக் குழுமத்தின் ஆசிய பொதுசபை கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக சர்வதேச விளையாட்டுப்போட்டிகளில் இந்தியா பதக்கங்களை அதிக எண்ணிக்கையில் வென்று வருவதாக குறிப்பிட்டார்.

2030-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள இளையோர் ஒலிம்பிக் போட்டிகளையும், 2036-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளையும் நடத்துவதற்கு இந்தியா உரிமைகோரும் என்றும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<>>>>>>

உலகம் முழுவதும் வாழும் தமிழர்களுக்கான பாதுகாப்பு அரணாக தமது அரசு திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

அரசுமுறைப்பயணமாக அமெரிக்கா சென்றுள்ள அவர், சிகாகோவில் நடைபெற்ற தமிழர் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றினார்

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் சொந்த ஊர்களை மேம்படுத்தும் "எனது கிராமம்" என்ற திட்டம் செயல்பாட்டில் உள்ளதாக அவர் கூறினார்.

இதேபோல், வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு கனியன் பூங்குன்றனார் விருது வழங்கப்படுவதாகவும் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் தனியார் மருத்துவமனைகளுக்கு இணையான வசதிகள் அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அரசு தலைமை மருத்துவமனையில் கண் அறுவை சிகிச்சை மையம் மற்றும் ஒருங்கிணைந்த சுகாதார ஆய்வகத்தை மாநில அமைச்சர் திரு எ வ வேலு-வுடன் இணைந்து திறந்துவைத்து அவர் பேசினார்.

இந்த மருத்துவமனையில் விரைவில் மனநல ஆலோசனை மையம் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர், சுகாதார கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவதாக திரு மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் உள்ள ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கென சிறப்புக்குழு ஒன்றை மாநில அரசு ஏற்படுத்த வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த விடுதிகளுக்கான நிதி காலதாமதமாக விடுவிக்கப்படுவதாக குறை கூறியுள்ளார்.

இதன் காரணமாக, மாணவர்கள் இன்னல்களுக்கு உள்ளாவதாகவும், இதனை தவிர்க்க நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கோரியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் அரசு போக்குவரத்துக்கழக பேருந்துகளின் தரத்தை உயர்த்த திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அக்கட்சி, சிறுவர்கள், பெண்கள், முதியோர் என அனைத்துத்தரப்பினரும் பயன்படுத்தும் அரசு பேருந்துகள் பழுதடைந்த நிலையில் உள்ளதாக குறை கூறியுள்ளது.

பயணிகளின் பாதுகாப்பில் எவ்வித அக்கறையும் இன்றி இத்தகைய பேருந்துகளை திமுக அரசு இயக்கி வருவதாகவும் பிஜேபி தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக தலைவர் திரு அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அண்மையில் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 14 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பிரச்சினையில் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து விரைவாக தீர்வுகாண வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரை சந்தித்து கோரிக்கை விடுக்க வேண்டும் என்றும் திரு அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேலும் வலுவடைந்து, ஒடிசாவின் **Puri** - மேற்குவங்கத்தின் **Digha** இடையே நாளை இரவு கரையை கடக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (1) - 41 செகண்ட்ஸ்)*

கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த ஐந்து நாட்களுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று திரு செந்தாமரை கண்ணன் கேட்டுக்கொண்டார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (1) - 27 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

தேசிய நல்லாசிரியர் விருது பெற்று வேலூர் மாவட்டம் குடியாத்தத்திற்கு வருகை தந்த ஆசிரியர் திரு கோபிநாத்துக்கு இன்று உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

உறவினர்கள், சக ஆசிரியர்கள், பொதுமக்கள், மாலை மற்றும் சால்வைகளை கோபிநாத்துக்கு அணிவித்து வரவேற்பு அளித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு கோபிநாத், பிரதமரின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப இனிவரும் காலங்களில் கல்விப்பணிகளோடு சமூக பணிகளையும் மேற்கொள்ள உள்ளதாக கூறினார்.

*(சவுண்ட் பைட் - கோபிநாத் - 50 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தருமபுரி மாவட்டத்தில் ஒரு கோடி பனை விதைகள் நடும் பணியினை ஒகேனக்கல் காவிரி கரையில் ஆட்சியர் திருமதி சாந்தி இன்று தொடங்கிவைத்தார்.

-----------

திருவாரூர் மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப்போட்டிகள் நடத்துவது குறித்த ஆலோசனைக்கூட்டம் ஆட்சியர் திருமதி சாருஸ்ரீ தலைமையில் நடைபெற்றது.

----------------

பெரம்பலூர் மாவட்டத்தில் உயர்கல்விக்கான மாநில அரசின் வழிகாட்டுதல் நிகழ்ச்சி நாளை மறுநாள் நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் கூறியுள்ளார்.

-------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் வெள்ளையூர் கிராமத்தில் செயல்பட்டுவரும் தொழுநோயாளிகள் காப்பகத்தின் அடிப்படை வசதிகள் குறித்து ஆட்சியர் திரு பிரசாந்த் ஆய்வு செய்தார்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் பாராலிம்பிக் போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைகின்றன.

இந்திய நேரப்படி இரவு பதினொன்றரை மணிக்கு தொடங்கவுள்ள நிறைவு விழா அணிவகுப்பில், இந்தியாவின் தேசியகொடியை **Harvinder Singh** மற்றும் **Preethi Pal** ஏந்தி செல்ல உள்ளனர்.

இப்போட்டியில், இந்தியா 7 தங்கம், 9 வெள்ளி, 13 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 18-ஆவது இடத்தை பிடித்தது.

-----------

மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச சேலஞ்சர் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 11-5, 11-6, 11-9 என்ற செட் கணக்கில், பாகிஸ்தானின் **Noor Zaman** –ஐ வென்றார்.

-----------

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டியில் இந்தியா 3-0 என்ற கோல் கணக்கில் சீனாவை வென்றது.

-------------

20 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Ankush** வெண்கலப்பதக்கம் வென்றார்.

------------

ஆசிய ஒலிம்பிக் குழுமத்தின் தலைவராக இந்தியாவின் **Randhir Singh** போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**<<<<<END>>>>>>**